**செ. கு. எண்: 183** **நாள் : 09.12.2015**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 9.12.2015

தமிழ்நாட்டில் வடகிழக்குப் பருவமழை மற்றும் தென்மேற்கு வங்கக் கடலில் ஏற்பட்ட காற்றழுத்த தாழ்வு நிலை காரணமாக பெய்த கன மழையினால் 1.12.2015 அன்று சென்னை, எழும்பூர் வட்டம், புதுப்பேட்டையைச் சேர்ந்த திரு. ஜான்மோசஸ் என்பவரின் மகன் வினோத்குமார்;

காஞ்சிபுரம் மாவட்டம், திருப்பெரும்புதூர் வட்டம், குன்றத்தூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. குலசேகரன் என்பவரின் மனைவி சுசிலாபாய்; செங்கல்பட்டு வட்டம், நந்திவரம் கிராமத்தைச் சேர்ந்த திரு. கந்தசாமி என்பவரின் மகன் அருண்குமார்; தைலாபுரம் கிராமத்தைச் சேர்ந்த திரு. சஞ்சீவ நாயுடு என்பவரின் மனைவி மம்தாபாய்;

2.12.2015 அன்று சென்னை, கிண்டி வட்டம், சைதாப்பேட்டையைச் சேர்ந்த திரு. கண்ணப்பன் என்கிற அருள்தாஸ்;

காஞ்சிபுரம் நகரம், மகாத்மா காந்தி நகரைச் சேர்ந்த திரு. சேகர் என்பவரின் மகன் ஜெயபாலன்; திருப்பெரும்புதூர் வட்டம், எருமையூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. அந்தோணி என்கிற நடராஜ் என்பவரின் மகன் ஞானபிரகாசம்; குன்றத்தூர் 'B' கிராமத்தைச் சேர்ந்த திரு. முனியன் என்பவரின் மனைவி வயலட் மேரி;

3.12.2015 அன்று சென்னை, ஜாபர்கான் பேட்டையைச் சேர்ந்த திரு. நாகலிங்கம் என்பவரின் மகன் சேது; கிண்டி வட்டம், தியாகராய நகரைச் சேர்ந்த திரு. சின்னதம்பி என்பவரின் மகன் கந்தசாமி;

காஞ்சிபுரம் மாவட்டம், தாமல் கிராமத்தைச் சேர்ந்த திரு. பாலு என்பவரின் மகன் தீனதயாளன்; திருப்பெரும்புதூர் வட்டம், நடுவீரப்பட்டு கிராமத்தைச் சேர்ந்த திரு. ஆறுமுகம் என்பவரின் மகன் அரிகிருஷ்ணன்; வரதராஜபுரம் கிராமத்தைச் சேர்ந்த திரு. பாலகிருஷ்ணன் என்பவரின் மகன் கோபிகிருஷ்ணன்; திரு சுப்பிரமணி என்பவரின் மகன் துலுக்காணம்; பரணிபுத்தூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. கன்னியப்பன் என்பவரின் மகன் மணி; செங்கல்பட்டு வட்டம், ஊரப்பாக்கம் கிராமத்தைச் சேர்ந்த திரு. நாகராஜ் என்பவரின் மகன் பாலாஜி; நந்திவரம் கிராமம், ஜெயராம் நகரைச் சேர்ந்த திரு கன்னியப்பன் என்பவரின் மனைவி பத்மாவதி;

காஞ்சிபுரம் வட்டம், திம்மசமுத்திரம் கிராமத்தைச் சேர்ந்த திரு. கன்னியப்பன் என்பவரின் குழந்தை தமிழ்செல்வி; திருப்பெரும்புதூர் வட்டம், கெருகம்பாக்கம் கிராமத்தைச் சேர்ந்த திரு வேலாயுதம் என்பவரின் மகன் ஆச்சிமுத்து; ஆலந்தூர் வட்டம், பல்லாவரத்தைச்

சேர்ந்த திரு முனுசாமி என்பவரின் மகன் செல்வம்; திருக்கழுக்குன்றம் வட்டம், தாழம்பேடு கிராமத்தைச் சேர்ந்த திரு. முனுசாமி என்பவரின் மகன் பெருமாள்;

4.12.2015 அன்று சென்னை, கிண்டி வட்டம், சைதாப்பேட்டையைச் சேர்ந்த திரு. கண்ணன் என்பவரின் மகன் நாகராஜ்;

5.12.2015 அன்று காஞ்சிபுரம் மாவட்டம், கொளப்பாக்கம் கிராமத்தைச் சேர்ந்த திரு சத்தியசாய் என்பவரின் மனைவி நளினி;

6.12.2015 அன்று திருக்கழுக்குன்றம் கிராமத்தைச் சேர்ந்த திரு. கணபதி என்பவரின் மகன் வெங்கடேசன்;

திருநெல்வேலி மாவட்டம், திசையன்விளை கிராமத்தைச் சேர்ந்த திரு ராமர் என்பவரின் மகள் ஜெபிபுஷ்பா;

—ஆகியோர் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டு நீரில் மூழ்கி உயிரிழந்தனர் என்ற செய்தியையும்;

1.12.2015 அன்று காஞ்சிபுரம் மாவட்டம், உத்திரமேரூர் வட்டம், குண்ணவாக்கம் கிராமத்தைச் சேர்ந்த திரு தாந்தோணி என்பவரின் மனைவி எல்லம்மாள்;

5.12.2015 அன்று செங்கல்பட்டு வட்டம், தட்டான் மலைத் தெரு கிராமத்தைச் சேர்ந்த திரு. முருகன் என்பவரின் மகன் தீபக்;

6.12.2015 அன்று வேலூர் மாவட்டம், வாலாஜா வட்டம், திம்மனஞ்சேரி குப்பத்தைச் சேர்ந்த திரு வாசு என்பவரின் மகன் ரமேஷ்;

திருவண்ணாமலை மாவட்டம், கலசபாக்கம் வட்டம், கெங்காவரம் கிராமத்தைச் சேர்ந்த திரு. நாராயணன் என்பவரின் மனைவி முனியம்மாள்;

— ஆகியோர் மழையின் காரணமாக வீட்டின் சுவர் இடிந்து விழுந்ததில் பலத்த காயமடைந்து உயிரிழந்தனர் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

தமிழ்நாட்டில் பெய்த கன மழையின் காரணமாக பல்வேறு நிகழ்வுகளில் மேற்கண்ட தேதிகளில் உயிரிழந்த இந்த **29** நபர்களின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தத் துயர சம்பவங்களில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு தலா நான்கு லட்சம் ரூபாய் பேரிடர் நிவாரண நிதியிலிருந்து உடனடியாக வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு:**
**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**